**<u>…….அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்;</u>**

Let us Pray.

<u>ஆண்டவருடைய வார்த்தை சொல்கிறது:</u>

இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ <u>அநேக உபாயதந்திரங்களைத்</u> தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன். (பிரசங்கி/Ecclesiastes 7:29)

இந்தியாவில் அன்றாட வழக்கத்திலே பலராலும் பேசப்படும் ஒரு சில பழமொழிகள்:

"செய்யும் தொழிலே தெய்வம்" "Your Job is God"
"கணவனே கண்கண்ட தெய்வம்" "Husband is your seen God"
"குழந்தையும் தெய்வமும் ஒன்று" "Children and God are same"
"மாதா பிதா குரு தெய்வம்" ."Mother, Father, Teacher, God"
. . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . .

*இப்படி எல்லாவற்றிலும் தெய்வத்தைப் பாாக்கவும் தெய்வபக்தியில் வளரவும்…..*
*இந்த பழமொழிகள் ஆரம்பத்தில் உதவிசெய்யலாம்….*

---------------------------------------------------

தமிழ்நாட்டுக்கு உலகப் பெரும் புகழைப் பெற்றுத்தந்த திருவள்ளுவர் சொல்கிறார்:

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. (குறள் 1)

மேலும் அவர் சொல்கிறார்:

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள் 2)

இப்படி தெய்வத்தின் அருளினாலே பெறப்படும் அவ்வுலக வாழ்க்கையைப் பற்றியும் சொல்கிறார்:

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)

*உலகிலுள்ள **<u>எல்லாவற்றுக்கும் முதல்வராக</u>** தெய்வம் இருக்குமானால்…..*
*மேற்சொன்ன பலமொழிகள் எதைக்குறிக்கிறது……?*

------------------------------------------------------

நம் முன்னோர்கள், மக்களுக்கு தெய்வ பயபக்தியை ஆரம்பத்திலேயே உண்டாக்கவேண்டுமென்ற எண்ணத்தில், பலமொழிகள், சம்பிரதாயங்கள், சடங்காசாரங்கள்….போன்றவற்றை உருவாக்கி…....

….பயபக்தியோடே வளர்ந்து, கல்வி அறிவு (அனுபவ அறிவு) பெற்றவுடன், எல்லாவற்றுக்கும் முதல்வரான மெய் தெய்வத்தை அறிந்து, தொழுதுகொண்டு, வளர்ந்து பூரணப்படவும் வேண்டும் என்ற பிரதான நோக்கம்……….. உணரப்படாமல்…….. சம்பிரதாய, சடங்காசாரங்களிலேயே வாழ்க்கையை ஓடிமுடிக்கும்…………

ஒரு தவறான சூழ்நிலை மக்களிலே வளர்ந்துவிட்டதுபோல எனக்குத் தோன்றுகிறது…..

**தயவுசெய்து அமைதியாகவும் ஆழ்ந்தும் சிந்தித்துப் பாருங்கள்…**

<u>ஆண்டவருடைய வார்த்தை சொல்கிறது:</u>

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். (யோவான்/John 17:3)

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர்/Romans 6:23)

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர்/Romans 8:2)

தெய்வத்தை வணங்குவதன் மிகப்பிரதானமான நோக்கம்…..
இந்த வாழ்க்கைக்குப் பிறகு இறைவனோடு வாழ்வதற்குத் தகுதி பெறுவது. (நித்தியஜீவன்)

இவ்வுலக வாழ்க்கையில் வெற்றியும் ஆண்டவரோடு அவ்வுலக வாழ்க்கையின் நிச்சயத்தையும் பெற, ஆண்டவராகிய கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை தொடர்ந்து வாசித்து தியானிக்க, அன்புடனும் ஜெபத்துடனும் பணிவுடனும் கேட்டுக்கொள்கிறோம்.. ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**<u>Let us Pray.</u>**

**……they have sought out many inventions.**

**Let us Pray.**

Lo, this only have I found, that God hath made man upright; but they have sought out many inventions. (KJV) (பிரசங்கி/Ecclesiastes 7:29)

Truly, this only I have found: That God made man upright, But they have sought out many schemes." (NKJV)

Here few sayings (proverb) which are usually talk among many people in India.

"செய்யும் தொழிலே தெய்வம்" "Your Job is God"
"கணவனே கண்கண்ட தெய்வம்" "Husband is your seen God"
"குழந்தையும் தெய்வமும் ஒன்று" "Children and God are same"
"மாதா பிதா குரு தெய்வம்" ."Mother, Father, Teacher, God"
. . . . . . . . . . . . . .

*These words may help them to see God and bring Devotion in the life at the beginning…*

---------------------------------------------------

The world famous Great Indian Tamil Poet Thiruvalluvar said:

As all letters have the letter A for their first,
So the world has the eternal God for its first. (KURAL 1)

He further said:

What Profit have those derived from learning,
who worship not the good feet of Him who is possessed of Pure Knowledge? (KURAL 2)

He explains, By the Grace of God, we achieve the life with God after this world Life:

As this world is not for those who are without wealth,
So that world is not for those who are without kindness. (KURAL 247)

*If the world has the eternal God* ***for its first among all*** *.....*
*How about the proverb we read just before….?*

---------------------------------------------------

Our ancestors made many Proverb, Procedures, Sayings, Practices, Tradition to follow all of us….. May be in the intention to make everyone to grow in the life with reverence to God from beginning.

With that nature of growing, as we get along with knowledge and experience……
We all must understand the True God, give reverence, and grow with God day by day.
It looks many are missing this main intention and stay only in the practices……etc without achieving the main goal.

**Please think calm and deep….in this matter.**

The word of God says:

And this is eternal life: [it means] to know (to perceive, recognize, become acquainted with, and understand) You, the only true and real God, and [likewise] to know Him, Jesus [as the] Christ (the Anointed One, the Messiah), Whom You have sent. (AMP) (யோவான்/John 17:3)

For the wages of sin is death, but the gift of God is eternal life in Christ Jesus our Lord.
(ரோமர்/Romans 6:23)

For the law of the Spirit of life in Christ Jesus has made me free from the law of sin and death.
(ரோமர்/Romans 8:2)

To ultimate aim of worship, understand and living with God is….
to achieve the Life with God after this world. (Eternal Life)

To achieve in this world life success and to receive assurance of the after life with GOD,
With Love and Prayer, We request you to continuously read, meditate, and understand
the word of God. God Bless You.

**Let us pray.**